தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 1, திருவள்ளுவர் ஆண்டு—2055

2024 பிப்ரவரி 13, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *“நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்*
> *மலையினும் மாணப் பெரிது.”*

உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.

1. இரங்கற்குறிப்புகள்

சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள் திரு. ஆர். வடிவேல், திரு. ஏ. தெய்வநாயகம், திரு. எம். தங்கவேல், திரு. துரை இராமசாமி, திரு. கு.க. செல்வம், திரு. எஸ். இராசசேகரன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர். வடிவேல் அவர்கள் 27–11–2023 அன்றும், திரு. ஏ. தெய்வநாயகம் அவர்கள் 2–12–2023 அன்றும், திரு. எம். தங்கவேல் அவர்கள் 17–12–2023 அன்றும், திரு. துரை இராமசாமி அவர்கள் 23–12–2023 அன்றும், திரு. கு.க. செல்வம் அவர்கள் 3–1–2024 அன்றும் மற்றும் திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் 31–1–2024 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஆர். வடிவேல் அவர்கள் 2002–2006 ஆம் ஆண்டுகளில் வாணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப்

[பேரவைத் தலைவர்] [2024 பிப்ரவரி 13

பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றினார்கள். மேலும், 2002–2003 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. ஏ. தெய்வநாயகம் அவர்கள் 1985–1988, 1991–1996 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் மதுரை (மத்தி) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எம். தங்கவேல் அவர்கள் 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் முசிறி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. துரை இராமசாமி அவர்கள் 1977–1980, 1980–1984, 1985–1988, 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் வெள்ளக்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 1993–1996 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கு.க. செல்வம் அவர்கள் 2016–2021 ஆம் ஆண்டுகளில் ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். இராசசேகரன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் ஆலங்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புற பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)